கருடஸ்வாமியும் விருப்பு வெறுப்பற்ற நடுநிலை வகிக்கும் அறிஞர்கள் குழுவுக்கு முன் தன் வாதங்களை முன்வைக்கத் தயார். அதேபோன்று நாகசாமியும் இந்தத் திறந்த விவாதத்தில் (Open Debate) பங்கு கொள்ள முன்வருவாரா?

ஸ்ரீ.உ.வே. பத்மநாபன், ஆதிப்பிரான் ஆசிரியருக்குக் கடிதம் எழுத ஏன் தயங்குகிறார்? நாகசாமியின் புத்தகத்தை சிறந்த நூலென்றும் அதைப்போன்ற நூல் இதுகாறும் வெளிவந்ததில்லை என்றும் தம்முடைய இதழ்களில் எழுதி வருகிறாரே! ஸ்ரீ.உ.வே. பத்மநாபன் போன்றவர்கள் தாங்கள் முன்வைக்கும் கருத்துக்களை நடைமுறைப்படுத்துவதற்கு முன்பு மஞ்சட்காமாலைக் கண்ணோடு வெளி உலகைப் பார்க்கும் ஆதிப்பிரான் ஆசிரியர் போன்றவர்களுடைய கருத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க முன்வருவார்களா?

ஸ்ரீ.உ.வே.கருணாகரன் தம்முடைய கருத்துக்களைத் தெரிவித்தபோது இராமாநுசரையும் அவரால் வளர்க்கப்பட்ட விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தையும் இல்லையெனச் செய்யும் முயற்சிகள் பல ஆண்டுகளாக பலரால் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகின்றன என்று குறிப்பிட்டார். கத்யத்ரயம் எழுதிய இராமாநுசர் வேறு, ஸ்ரீபாஷ்யம் எழுதிய இராமாநுசர் வேறு, நாம் கோயில்களில் விக்ரஹ ஆராதனை செய்துவரும் இராமாநுசர் வேறு என்றெல்லாம் சிலர் கூறி வந்ததாகக் குறிப்பிட்டார். அந்த சிலருக்குத் தலைவர் அக்னிஹோத்ரியேயாவார். அவருடைய ‘‘வரலாற்றில் பிறந்த வைணவத்தை’’ பெரும்பாலான வடகலைப் பிரிவைச் சார்ந்த வித்வான்கள் அந்தக்கால கட்டத்தில் கண்டிக்க முன் வரவில்லை. அவர்களில் ஸ்ரீ.உ.வே. கருணாகராசார்யரும் ஒருவர். பொதுவாக இவர்கள் அனைவரும் உரியமுறையில் முறையில் இதுபோன்ற அபத்த வாதங்களை எந்தக் காலத்திலும் கண்டிக்க முன்வருவதில்லை. அதுதான் உண்மை நிலை.

எந்தவொரு கேள்விக்கும் ஆம் அல்லது இல்லை என்ற பதில் தான் இருக்கக்கூடும். ஆம் இல்லை என்றோ, இல்லை ஆம் என்றோ ஒரு பதில் இருக்கமுடியாது. ஆனால் பெரும்பாலான ‘‘வைணவ அறிஞர்கள்’’ இல்லை ஆம் என்ற வகுப்பையே சார்ந்தவர்கள். தாம் சார்ந்துள்ள ‘‘இனக்குழுமனப்பான்மை’’தான் இவர்களிடம் மேலோங்கி நிற்கின்றது.

நாகசாமி எழுப்பிய பல்வேறு ஆதாரமற்ற வினாக்களுக்கு 18 நாட்கள் வாதப்பிரதிவாதங்கள் நடத்தப்படவேண்டும்.

30 நிமிட நேரத்தில் அவரவர்கள் தத்தம் நெஞ்சிற்குத் தோன்றியதை முடிவான கருத்துக்களாக வெளியிட்டு வருகின்றனர். ஸ்ரீ.உ.வே. கருணாகரன் முதலாம் குலோத்துங்கன் விஷ்ணுகோயில் களுக்குத் தானங்களை அதிக அளவில் கொடுத்த செயலின் அடிப் படையில், ஸ்ரீவைஷ்ணவர்களுக்குத் தீங்கிழைக்கவில்லை என்று கொள்ளமுடியாது என்ற ஒரு கருத்தை முன் வைத்தார். ஸ்ரீ.உ.வே. வேங்கடகிருஷ்ணன் அவர்களும் இதே கருத்தைத் திருமலையில் அனந்தாழ்வான் தோட்டத்தில் 'வேங்கடாசல இதிஹாஸமாலா' என்ற தலைப்பில் உரையாற்றியபோது வெளியிட்டார். காஞ்சி சங்கராசார்யர் ஜயேந்திர சரஸ்வதிரோடு இணைந்து ஆன்மீக உறவு கொண்டாடி பல விழாக்களில் பங்கு கொண்ட முன்னாள் முதல்அமைச்சர் செல்வி ஜெயலலிதா அதே சங்கராசார்யரைக் கைது செய்த நிகழ்ச்சிபோல முதலாம் குலோத்துங்கனும் ஸ்ரீவைஷ்ண வத்தின்பால் அன்பு கொண்டிருந்தபோதிலும் ஏதோவொரு காரண த்தின் அடிப்படையில் அவன் இராமாநுசருக்குக் கொடுமை இழைத்தி ருக்கக்கூடும் என்றெ ல்லாம் உதாரணங்களைக் காட்டி தம் கருத்தை வலியுறுத்தினார். முதலாம் குலோத்துங்கனை க்ருமிகண்ட சோழன் என்று சித்தரிக்க முயலும் இவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு முதலில் விடை தேட வேண்டும்.

1) பூர்வாசார்யர்கள் தம்முடைய வியாக்யானங்களிலோ அல்லது ஆறாயிரப்படி குருபரம்பராப்ரபாவம், ராமாநுஜார்ய திவ்ய சரிதை போன்ற நூல்களிலோ எந்த இடத்திலாவது குலோத்துங்க சோழன் என்று க்ருமிகண்ட சோழனைக் குறிப்பிட்டிருக்கிறார்களா?

2) இவர்கள் தம்முடைய நூல்களில் அவ்யபதேச்யன் அல்லது க்ருமிகண்ட சோழன் என்றுதான் குறிப்பிட்டிருக்கிறார்களே ஒழிய வேறு எந்தப்பெயரையும் குறிப்பிடவில்லை. ஏன்? குலோத்துங்கன் என்ற பெயரைக் குறிப்பிடவில்லை?

3) ''கிழக்குத்தை ராஜாக்கள்'' என்ற ஒரு சொற்றொடர் திருவாய்மொழி 7-10-5 ஈட்டு வ்யாக்யானத்தில் குறிப்பிட்டுள்ளதே. அதற்கு என்ன பொருள்.

4) 52 ஆண்டுகள் ஆட்சி பீடத்தில் அமர்ந்திருந்தவன் முதலாம் குலோத்துங்கன். அவனுடைய பெயரை 16ஆம் நூற்றாண்டில் ராமாநுஜார்யதிவ்யசரிதை எழுதிய பிள்ளைலோகம் ஜீயர் ஏன் குறிப்பிடவில்லை? முதலாம் குலோத்துங்கன் காலம் தொடங்கி பிள்ளைலோகம் ஜீயர் வாழ்ந்த காலமாகிய விஜயநகரமன்னர்கள் ஆட்சி செய்த காலம் வரை பல மன்னர்கள் இந்த நாட்டை ஆண்டு உள்ளனர். அப்படியிருக்க 52 ஆண்டுகள் ஆண்ட முதலாம் குலோத்துங்கனையோ அல்லது அவன் இராமாநுசனுக்கு இழைத்த கொடுமையையோ இவர்கள் அறியவில்லை என்றால் அதை எவ்வாறு ஏற்றுக் கொள்ளமுடியும்?

5) நம்முடைய பூர்வாசார்யர்கள் பொய் கலவாத நூல்களைப் படைத்தவர்கள். ''பொய்ம்மொழி ஒன்றில்லாத மெய்ம்மையாளர்கள்'' நம் ஆழ்வார்களும் ஆசார்யர்களும். அப்படியிருக்க அவர்களால் இராமானுசருக்குப் பெருந்துன்பம் விளைவிப்பிப்பதற்குக் காரணமானவன் பெயரை ஏன் குறிப்பிட இயலவில்லை? உண்மையிலேயே அவர்களுக்கு திடீரென்று தோன்றி சில மாதங்கள் ஆண்டு, மாண்ட அவனுடைய பெயர் தெரியவில்லை என்பதே இதற்குரிய பதிலாகும். அவன் பெயரைச் சொல்லுவதற்கோ, எழுதுவதற்கோ மனங்கூசி அவ்வாறு எழுதினார்கள். குலோத்துங்கன் என்ற பெயரைச் சொல்வதில் அவர்களுக்கு விருப்பமில்லை என்பதெல்லாம் தர்க்க வாதத்திற்குப் பொருந்தாது.

6) முதலாம் குலோத்துங்கனின் ஆட்சியாண்டு கி.பி.1070-1122 ஆகும்.

7) திருநாராயணபுரம் ஜீர்ணோர்த்தாரணமும், ஸம்ப்ரோக்ஷணமும் நடைபெற்றது கி.பி. 1098இல்.

8) **ஒரு வாதத்திற்காக முதலாம் குலோத்துங்கனை, க்ருமி கண்ட சோழன் ஆகக்கொண்டால் கி.பி. 1098ஆம் ஆண்டு மேலக்கோட்டை திருநாராயணபுரத்திற்குச் சென்றடைந்த இராமாநுசர் க்ருமி கண்ட சோழனாகிய குலோத்துங்கன் கி.பி. 1122ஆம் ஆண்டு இறந்த பிறகுதான் திருவரங்கத்திற்கு வர இயலும். அப்படிக் கொண்டால் இராமாநுசர் 25 ஆண்டுகள் மேல்கோட்டையில் இருந்திருக்கவேண்டும். ஆனால் குருபரம்பரை நூல்கள் 12 ஆண்டுகள் என்று குறிப்பிடுகின்றன. அப்படியானால் க்ருமி கண்ட சோழனாகிய முதலாம் குலோத்துங்கன் உயிரோடு இருந்தபோதே**

**இராமானுசர் திருவரங்கத்திற்கு திரும்பி வந்திருக்க வேண்டும். ஆனால் குருபரம்பரை நூல்கள் க்ருமிகண்ட சோழன் இறந்தவாறே இராமானுசர் சோழதேசத்திற்கு மீண்டு வந்தார் என்று குறிப் பிடுகிறது.**

9) இராமானுசர் வாழ்ந்த காலத்தில் அரசாண்ட ஹொய்சாள மன்னர்களைப் பற்றிய முழுமையான குறிப்புகளை ஒருவர் உள்ளத்திலே கொள்ளவேண்டும். அதே போன்று பாண்டிய நாட்டை ஆண்ட மன்னர்களின் பட்டியல், மேலை மற்றும் கீழைச் சாளுக்கிய மன்னர்களின் பட்டியலையும் அறிந்திருக்கவேண்டும். அரசியல் மாற்றங்களையும் அவர்களுக்கு இடையே நடந்த போர்களையும் அவற்றின் விளைவுகளையும் ஒருவர் அறிந்து கொண்டாலொழிய இந்த க்ருமிகண்ட சோழன் யார் என்பதை உள்ளபடி அறிந்துகொள்ள இயலாது. இதற்கு குருபரம்பரை நூல்களின் உதவியை நாடமுடியாது.

10-1)இராமானுசருடைய காலம் 1017-1137

**சோழமன்னர்கள்:**

a) முதலாம் ராஜேந்திரன் கி.பி. 1012-1043

b) முதலாம் ராஜாதிராஜன் கி.பி. 1018-1054.

c) இரண்டாம் ராஜேந்திரன் கி.பி. 1052-1063.

d) ராஜ மஹேந்திரன் கி.பி. 1058-1063.

e) வீரராஜேந்திரன் கி.பி. 1063-1070.

f) அதி ராஜேந்திரன் கி.பி. 1068-1071.

g) கிருமி கண்ட சோழன் என்று சிலரால் கொள்ளப்படும் முதலாம் குலோத்துங்கன் கி.பி.1070-1122.

h) விக்ரம சோழன் கி.பி. 1118-1135.

i) இரண்டாம் குலோத்துங்கன் கி.பி. 1133-1150.

(இவனையும் க்ருமிகண்ட சோழன் என்று கூறுவார் உளர். அப்படியானால் திருநாராயணபுரம் ப்ரதிஷ்டைக்கு இராமாநுசரை அழைத்துச் செல்வது எவ்வாறு? இவன் இறந்ததோ கி.பி. 1150 ஆம் ஆண்டில். அதுவரை இராமாநுசர் உயிரோடு இல்லையே? ஏதோ ஒரு

புத்தகத்தில் யாரோ ஒருவன் எழுதிவைத்ததை கிளிப்பிள்ளை சொல் வதைப் போல நம்மவர்கள் சொல்லி வருவது வியப்புக்குரியது. இவன் தில்லைக் கோவிந்தராஜரை கடலில் எறிந்ததுதான் உண்மை. தம்முடைய முதிர்ந்த வயதில் இராமாநுசர் உத்ஸவ விக்ரஹமான கோவிந்தராஜரை ப்ரதிஷ்டை கண்டருளினார் என்பதே உண்மை. விரிவுக்கு அஞ்சி மேலும் பல குறிப்புகள் இங்கே தரப்படவில்லை.) குறிப்பு: ஒரு அரசன் ஆண்டு கொண்டிருக்கும்போது அவன் மகன் அல்லது உறவினர் யுவராஜாவாக முடிசூட்டப்படுவார்கள். அதனால் ஒரு மன்னனுடைய ஆட்சியாண்டின் இடைப்பட்ட பகுதியிலேயே மற்றொரு மன்னனுடைய ஆட்சியாண்டும் தொடங்கும்.)

10-2) **ஹொய்சாளர்கள்:**

1) நிருபகாமா-கி.பி. 1022-1047.

2) வினையாதித்தன்- கி.பி. 1047-1098.

3) எரயங்கா-கி.பி. 1063-1110. (இவன் ஒரு ஜைனன்)

4)முதலாம் வல்லாளன் அரியணை ஏறவில்லை.

5) விஷ்ணுவர்தனன்-கி.பி. 1110-1152என்று சிலரும், 1117-1152 என்று சிலரும் கொண்டுள்ளனர்.

10-3) **பாண்டியர்கள்:**

1) குலசேகர பாண்டியன்-கி.பி. 1055-1110.

2) சடையவர்மன் ஸ்ரீவல்லபன்-கி.பி. 1101-1124.

3) மானாபரணன் சடையவர்மன் கி.பி. 1104-1131. (இவனுடைய பெண் பட்டமாதேவி துளுவ மன்னனான வீரகவி அலுப்பேந்திரனை மணந்து கொண்டாள். காலம்-1114-1155)

4)சடையவர்மன் ஸ்ரீவல்லபன். கி.பி. 1131-1143.

கி.பி. 1098இல் இராமாநுசர் திருநாராயணபுரத்தைச் சென்று அடைந்த காலத்தில் அதாவது க்ருமிகண்ட சோழனான முதலாம் குலோத்துங்கனின் கொடுமைக்கு அஞ்சிச் சென்ற காலத்தில் அவர் விஷ்ணுவர்தனை சந்தித்திருக்க இயலாது. அவன் அப்போது நாட்டின்

மன்னனாகவும் முடிசூடிக்கொள்ளவில்லை. அப்போது நாட்டை ஆண்டு வந்தவன் எரயங்கா ஆவான். அவனுடைய மூத்த பிள்ளை யான முதலாம் வல்லாளன் பட்டத்திற்கு உரியவன் உயிரோடு இருந்தான். பின் நடந்த போர்களில் அவன் இறந்துபட, அவன் தம்பி யான விஷ்ணுவர்தனன் (பிட்டிதேவன்) முடிசூடிக்கொள்கிறான். ஆகவே விஷ்ணுவர்தனன் கி.பி. 1098இல் மன்னனாக முடிசூட்டிக் கொள்ளவில்லை.

கி.பி. 1117இல் அதாவது விஷ்ணுவர்தனன் மன்னனாக முடிசூடிக்கொண்ட காலத்தில்தான் பேலூர், தலக்காடு, கடக், தொண்டனூர் ஆகிய ஊர்களில் பஞ்சநாராயண ப்ரதிஷ்டை நடை பெறுகிறது. முதலியாண்டானும் அவருடன் எழுந்தருளியிருந்தார்.

இதுபோன்ற சரித்திரச் சான்றுகளை ஒதுக்கித்தள்ளிவிட்டு கி.பி. 1098இல் இராமானுசரை மேல்கோட்டையில் இருக்கச்செய்ய வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக எண்ணாயிரம் நரசிம்மப் பெருமாளை தன் குலதெய்வம் என்று கொண்டாடியவனும், மதுராந்தகம் ராமர் கோயிலை புனர்நிர்மாணம் செய்தவனும், இராமானுசர் போன்ற த்ரிதண்டி ஸந்யாசி களுக்கு அவர்கள் மேற்கொண்டுள்ள நெறிக்கேற்ப மாதுகரத்திற்கு ஏற்பாடு செய்த தென்னவன் மாதேவியை மனைவியாய்க் கொண்ட வனும், பல்வேறு விஷ்ணுகோயில்களைத் தன்னுடைய அனைத்து ஆட்சியாண்டுகளிலும் புனர்நிர்மாணம் செய்தவனும், ஸ்ரீவைஷ் ணவக்குடியில் பிறந்த பரம ஸ்ரீவைஷ்ணவனும் (சாளுக்கியர்கள் ஸ்ரீவைஷ்ணவ நெறியைப் பின்பற்றி வந்தவர்கள்) பரம ஸ்ரீவைஷ் ணவனான கருணாகரத் தொண்டமானை சேனைத் தலைவராகக் கொண்டிருந்தவனுமான முதலாம் குலோத்துங்கனை க்ருமிகண்ட சோழன் என்ற பட்டம் சூட்டி ‘‘பாகவத அபசாரத்தைத்’’ தேடிக் கொள்கிறோம் என்பதை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும்.

மேலும் இவ்வாறு முதலாம் குலோத்துங்கனை க்ருமி கண்ட சோழன் என்று கூறுபவர்கள் இராமானுசர் வாழ்ந்திருந்த காலத்தில் நிலவி யிருந்த அரசியல் சூழ்நிலையை அறிந்துகொள்ள முற்பட வில்லை. அதிராஜேந்திரனுடைய அகால மரணத்திற்குப் பிறகு வாரிசு இல்லாத சோழ நாட்டில் ஆங்காங்கே குறுநில மன்னர்கள் சோழ அரியணையில் அமர வலிமை மிக்க குழுக்களின் உதவியை நாடினர் என்பதை வலங்கை இடங்கை வரலாறு கூறும். அத்தகைய ஒருவன் சைவர்கள், அத்வைதிகள், இராமானுசருடைய சீர்திருத்தத்தால் வெளி யேற்றப்பட்ட

கோயில் பெருச்சாளிகள், வைகாநஸ அர்ச்சகர்கள், இராமானுசருடைய சமூக சீர்திருத்தங்களைக் கண்டு அஞ்சிய தீவிர ஸ்ரீவைஷ்ணவ வைதிகர்கள் (பெரியநம்பி திருமாளிகைக்கு முன்பு முள்வேலி வைத்த ஸ்ரீரங்கத்து முரட்டு வைதிகர்களைப் பற்றி இதே குருபரம்பரைதான் குறிப்பிடுகிறது.) ஆகிய அனைவரும் தம்தமக்கு ள்ளே உள்ள பகைமையை மறந்து ஒன்றுகூடி திடீரென்று தோன்றி அரியணையைக் கைப்பற்ற விழைந்த குறுநில மன்னனுக்கு (இவனும் சோழ மன்னனுடன் உறவு கொண்டவன்) ஆதரவு தர முற்பட்டிருக்க வேண்டும். அதன் விளைவாகவே இராமாநுசர் திருவரங்கத்தை விட்டகல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. (அதாவது கி.பி. 1070ஆம் ஆண்டுக்கு முன்போ பின்போ) அரியணையில் சில மாதங்கள் அமர்ந்த குறுநில மன்னன் முதலாம் குலோத்துங்கனின் வரவால் கொல்லப் பட்டிருக்க வேண்டும். கிழக்குத்தை ராஜாக்கள் என்று ஈட்டு விரிவுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது இடங்கை வலங்கை கலகத்தின் போது அவர்கள் உதவியை நாடி அதிராஜேந்திரனின் மரணத்திற்குப் பிறகு நாட்டைக் கையகப்படுத்த விழைந்த குறுநில மன்னர்களைக் குறிப்பிடும் சொல்லாகக் கொள்ளவேண்டும். சோழ ராஜாவை ஒருமையில் குறிப்பிடவேண்டுமே தவிர கிழக்குத்தை ராஜாக்கள் என்ற பன்மைச் சொல்லால் குறிப்பிடவேண்டிய அவசியமில்லை.

அவ்வாறு சில மாதங்கள் அரியணையில் அமர்ந்த அந்தக் குறுநில மன்னனின் பெயர் நம் பூர்வாசார்யர்களுக்குத் தெரியவில்லை. ஆகவே அவ்யபதேச்யன் (பெயர் அறியப்படாதவன்) என்று அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். மேல்கோட்டை சென்ற இராமாநுசர் க்ருமிகண்ட சோழனாகிய அவ்யபதேச்யன் அதாவது சில மாதங்கள் ஆட்சியில் இருந்த குறுநில மன்னன் இறந்தவாறே கி.பி. 1074 அல்லது 1075இல் சோழ தேசத்திற்குத் திரும்பியிருக்க வேண்டும். ஸ்ரீரங்கம் கல்வெட்டு களின்படி துளுவ மன்னனான வீரகவி அலுப்பேந்திரனும், ஹொய்சாள இளவரசனான விஷ்ணுவர்தனனும் திருவரங்கத்திற்கு கி.பி. 1097இல் வருகை தந்ததாக அறிகிறோம்.

தொண்டனூர் நம்பியால் திருத்தப்பெற்ற விஷ்ணுவர்தனன் இராமாநுசரை அப்போதுதான் முதன்முதலில் கண்டு திருவடி தொழு திருக்கக்கூடும். இதுபோன்ற வரலாற்றுச் சான்றுகள் பலவற்றை Ramanuja A Reality Not A Myth என்ற நூலில் அடியேன் கொடுத்து உள்ளேன். முதலாம் குலோத்துங்கனை எப்பாடுபட்டாவது க்ருமி கண்ட

சோழனாய் சித்தரிக்க விரும்பும் அறிஞர்கள் இந்த நூலை முழுமையாகப் படித்தபிறகு தம் வாதத்தில் உள்ள குறைபாடுகளை அறிந்து கொள்ள லாம். இல்லை!இல்லை!!இல்லை!!! முதலாம் குலோத்துங்கன்தான் க்ருமிகண்ட சோழன் என்று கூறுபவர்களுக்கு யாரும் இதற்கு மேல் விடை கூறமுடியாது. அவர்கள் அதைச் சொல்லிக்கொண்டே இருக்க வேண்டியது தான். வரலாற்று உணர்வு முழுமையாக இருந்தால்தான் க்ருமிகண்ட சோழன் யார் என்ற உண்மை மனதில்படும். குருபரம்பரை நூல்களில் குறிப்பிடப்படும் நிகழ்ச்சிகளை வரலாறு என்னும் கை விளக்கின் உதவி கொண்டுதான் பார்க்கவேண்டும்.

திருநாராயணபுரத்தில் நடைபெற்ற இராமானுசரைப் பற்றிய கருத்தரங்கில் 22-4-2010 அன்று மாலை அமர்விற்கு திரு. Prof. Samaresh Bhandhyopadhyaya, Kolkata, 'Nil-Kamal' 203, Lake Town, Block-A, Kolkata-700 089. (033) 2534-9549; 09432333918) (M) அவர்கள் தலைமை தாங்கினார். அவர் தம்முடைய அறிமுக உரையில் நாக சாமியின் நூலைப் பற்றிக் குறிப்பிட்டார். தனக்கு அந்த நூல் நாகசாமி யால் அனுப்பி வைக்கப்பட்டதென்றும், அந்த நூலுக்கு தக்கதொரு அணிந்துரையை அவரிடமிருந்து எதிர்பார்ப்பதாகவும் அவர் எழுதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டதென்றும் தெரிவித்தார். மேலும் திரு.Bhandhyopadhyaya, நாகசாமிக்கு எழுதிய பதில் கடிதத்தில் கீழ்க் கண்டவாறு குறிப்பிட்டிருந்ததாகவும் தெரிவித்தார்.

"It is not worth reading your book. There is no question of giving a foreword" நாகசாமியின் புத்தகத்திற்கு அவரால் எந்த அறிஞரி டமிருந்தும் அணிந்துரையைப் பெற இயலவில்லையே. ஏன்? என்ற இந்தக் கேள்விக்கு தற்போது விடை கிடைத்துள்ளது. பாவம். நாகசாமி ஆதிப்பிரான் ஆசிரியரை அப்போது அணுகவில்லைபோலும். ஒருவேளை நாகசாமி அவரை அணுகியிருந்தால் அருமையான அனைத்து வகையிலும் சிறப்புடைய ஒரு அணிந்துரையைப்(?) பெற்றிருக்கலாம். அப்படிப்பட்ட ஒரு அணிந்துரையை நாம் படிக்க இயலவில்லையே என்ற சோகம்தான் மேலிடுகிறது.

22-4-2010 அன்று காலை அமர்வில் பாஞ்சஜன்யம் ஆசிரியர் அன்றைய முதலாவது அமர்விற்குத் தலைமை தாங்கினார். சாஸ்த்ரா பல்கலைக்கழக கணித இயல்துறைப் பேராசிரியர். ஸ்ரீ.உ.வே. கண்ணன் ‘‘ஸ்ரீபாஷ்யமும் திருவரங்கத்து எம்பெருமானும்’’ என்ற தலைப்பில் உரையாற்றினார். அன்றையதினம் ஸ்ரீநிகமாந்த மஹா

தேசிகனின் ‘‘ஸுபாஷித நீவி’’ என்ற நூலில் அமைந்துள்ள எண் இயல் கோட்பாடுகளை விரிந்த அளவில் எடுத்துரைத்தார் ஸ்ரீ.உவே. கண்ணன். ஸ்ரீபாஷ்யம் பெரியபெருமாளின் பெருமையையும், ப்ரண வாகார விமானத்தின் சீர்மையையும் வெளிப்படுத்துகிறது என்று அவர் தெரிவித்தார். அவருடைய சொற்பொழிவைப் பற்றிய கருத்துக் களை வெளிப்படுத்திய பாஞ்சஜன்யம் ஆசிரியர் தற்போது ஸ்ரீரங்க நாதன் ஸ்ரீபாஷ்யத்தை செவி மடுப்பதில்லை என்று அவையோரிடம் விண்ணப்பித்தார். இனி அதற்கான காரணங்களை ஆராய்வோம்.

ஸ்ரீபாஷ்யத்திற்கு விவரணமாண சுருதப்ரகாசிகையில் கீழ்க் கண்ட த்யான ச்லோகம் காணப்படுகிறது. இதன்படி ஸ்ரீபாஷ்யத்திற்கு ப்ரதிபாத்யன், ஸ்ரீரங்கநாதனே என்று அறுதியிடப்பட்டுள்ளது.

*ச்ருத்யந்தேஷு ச்ருதம் ப$_4$ாஷ்யே மதம் த்$_4$யாதம் ஹ்ருத$_3$ம்பு$_3$ஜே* I
*லக்ஷ்மீத$_4$ரம் (பதிம்) ப்ரபத்$_4$யே (அ)ஹம் த்$_3$ருஷ்டம் ஸ்ரீரங்க$_3$த$_4$ாமநி* II

‘‘வேதாந்தங்களில் கேட்கப்பட்டவரும், (ஆராயப்பட்டவரும்) பாஷ்யத்தில் மனனம் செய்யப்பட்டவரும், ஹ்ருதய கமலத்தில் த்யானிக்கப்பட்டவரும் ஸ்ரீரங்கக்ஷேத்ரத்தில் காணப்பட்டவருமான ஸ்ரீதரனை நான் சரணமடைகிறேன்’’ என்பது இதன் பொருளாகும்.

ஆனால் தற்போது ஸ்ரீரங்கநாதன் திருமுன்பு ஸ்ரீபாஷ்யம் ஸேவிக்கப்படுவதில்லை. படிப்பு என்றதொரு நிகழ்ச்சி அத்யயன உத்ஸவம் தொடக்கமான பல உத்ஸவங்களின் முடிவில் ஒரு காலத்தில் ஸேவிக்கப்பட்டு வந்தது. இந்தப் படிப்பை ஸேவிக்கும் உரிமை திருத்தாழ்வரைதாஸர், ஆயனார் வம்சத்தவர்களைச் சேர்ந்தது. அவர்களுடைய சந்ததியினர் தற்போது கைங்கர்யத்தில் பங்கு கொள்ளாததால் இந்தக் கைங்கர்யம் நின்றுபோய்விட்டது. இதுபோல் கோயில் கணக்கப்பிள்ளை, அமுதனார் ஆகியோருடைய கைங்கர் யங்களும் மாற்றம் அடைந்துள்ளன. திருவரங்கம் கோயிலைப் பொறுத்த அளவில் எம்பெருமானார் காலம் தொடங்கி கி.பி.1323ஆம் ஆண்டு மாலிக்காபூர் படையெடுப்புவரை முதலியாண்டான் வம்சத்த வர்களான வாதூல தேசிக பரம்பரையைச் சேர்ந்தவர்கள் திருக்கோயில் நிர்வாஹத்தை மேற்பார்வையிட்டு வந்தனர்.

கலாபத்திற்குப் பிறகு அழகியமணவாளன் ஆஸ்தானம் திரும்பியது கி.பி. 1371ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில். (பரீதாபி ஆண்டு வைகாசி 17ஆம் நாள்) அதன்பிறகு உத்தமநம்பி வம்சத்தைச்

சார்ந்தவர்கள் திருக்கோயில் நிர்வாஹப் பொறுப்பை மேற்கொண்டு வந்தனர். ஸ்ரீமணவாளமாமுனிகள் திருவரங்கத்திற்கு எழுந்தருளியது கி.பி. 1413ஆம் ஆண்டு. முகம்மதியர் படையெடுப்பால் சீர் குலைந்திருந்த திருவரங்கம் பெரியகோயில் நிர்வாஹத்தை சீரமைப்புச் செய்தவர் ஸ்ரீமணவாளமாமுனிகள். உடையவருடைய நியமனப்படி திருக்கோயில் நிர்வாஹம் வாதூலதேசிக வம்சத்தவர்களிடமே இருக்க வேண்டும் என்று திருவுள்ளம் பற்றி அந்த வம்சத்தைச் சார்ந்தவரும் தம்முடைய சிஷ்யருமான கோயில் அண்ணனிடம் திருக்கோயில் நிர்வாஹப்பொறுப்பை ஒப்படைத்தார்.

அதன்பிறகு பல நூற்றாண்டுகள் கோயில் அண்ணன் வம்சத்தைச் சார்ந்தவர்கள் கோயில் நிர்வாஹத்தை மேற்கொண்டு வந்த போதிலும் மூன்றாம் முத்துவீரப்பன் (கி.பி. 1682-1689) காலத்தில் கோயில் மரியாதைகளில் மாறுதல்கள் பல ஏற்பட்டன. வாதூல வம்சத்தைச் சேர்ந்த துரைரங்காசார்யார் என்பவர் ராணி மங்கம்மாவிற்கு குலகுருவாய் விளங்கி வந்தார். கோயில் அண்ணன் மற்றும் அப்பன் ரங்காசார்யார் ஆகியோரிடையே திருக்கோயில் மரியாதைகளைப் பெறுவதில் பல குழப்பங்கள் நேர்ந்தன. இவர் களிடையே ஏற்பட்ட உரிமைப் போராட்டம் 1903ஆம் ஆண்டுவரை நீடித்தது.

பெரியபெருமாள் திருமுன்பு ஸ்ரீபாஷ்யம் வாதூல தேசிக வம்சத்தவர்களால் ஸேவிக்கப்பட்டு வந்ததைக் குறிப்பிடும் கல்வெட்டு எண் A.R. No. 106/1937-38 சந்தன மண்டபத்தின் தெற்குப் பக்கச் சுவரில் 8-9-1690ஆம் நாள் பொறிக்கப்பட்டுள்ளது.

**560. ஸ்ரீரங்கம் கல்வெட்டு எண்.560.** (A.R.No.106/1937-38)

இடம்: சந்தன மண்டபம் தெற்குப் பக்கச் சுவர்.


தெலுங்கு மொழியில் அமைந்துள்ள இந்தக் கல்வெட்டில், மதுரை நாயக்க மன்னனான, விசுவநாத நாயக்கர் பரம்பரையைச் சார்ந்த ஸ்ரீரங்ககிருஷ்ணமுத்துவீரப்ப நாயக்கன் காலத்தில் கோயில் ஸ்தலத்தார்களில் ஒருவரான ஆச்சி ஸ்ரீரங்காசார்யருடைய பேரனுக்கு உரிய மரியாதைகள் மீண்டும் அவருக்கு அளிக்கப்பட்டதைப் பற்றியக் குறிப்புகள் காணப்படுகின்றன.


ரிக் சாகை, ஆச்வலாயன ஸூத்திரம், கார்க்ய கோத்ரத்தைச் சார்ந்த ஆச்சி ஸ்ரீரங்கநாராயணாசார்யருடைய பேரனும், வரதாசார்


யருடைய புத்திரனுமான குமார வேங்கட வரதாசார்யருக்கு தீர்த்தம், பரியட்டம், ரிக்வேத விண்ணப்பம், ஸ்ரீபாஷ்ய விண்ணப்பம் மற்றும் அவருக்குரிய மரியாதைகளை இந்த மன்னன் ஏற்படுத்தி வைத்தான் என்று காணப்படுகிறது.

இந்த மரியாதையை அவர்கள் எம்பெருமானார் காலம் தொட்டு பெற்று வந்ததால் அவர்களுக்கு மீண்டும் அவைகள் அளிக்கப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு கால கட்டத்தில் ஆச்சி ஸ்ரீரங்கநாராயணாசார்யர் தம்முடைய சிஷ்யர்கள் பலரோடு வடதேச யாத்திரை மேற்கொண்டதாகவும், அங்கேயே அவர் பல ஆண்டுகள் தங்கிவிட்ட நிலையில் அவருடைய பெயரனுக்கு கோயிலில் மரியாதைகள் மறுக்கப்பட்ட நிலையில் ஸ்ரீரங்கநாராயண ஜீயர், ஸ்ரீவேதவ்யாஸ பட்டர், ஸ்ரீபராசரபட்டர் ஆகியோர்களுக்கு மரியாதைகள் அளித்திடும்போது தமக்கும் அந்த மரியாதைகளை மீண்டும் ஏற்படுத்திடவேண்டும் என்று கேட்டுக் கொண்டதற் கிணங்க மன்னன் தலையிட்டு அவற்றை மீண்டும் ஏற்படுத்தி வைத்தான் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பட்டர் வம்சத்தவருக்கு மரியாதைகள் ஆனபிறகும் பெரியநம்பி வம்சத்தவர்களுக்கு மரியாதைகள் அளிக்கப்படுவதற்கு முன்பும் வாதூல தேசிகர்களுக்கு மரியாதை அளித்திட வேண்டு மென்பதே இவருடைய கோரிக்கை. இதை மன்னன் ஏற்றுக்கொண்டு அவ்வாறாக நடைபெறுவதற்கு தேவையான ஆணையைப் பிறப்பித் தான் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.







தெலுங்கு மொழியில் அமைந்துள்ள இந்தக் கல்வெட்டு தொல்பொருள் துறையினரால் பதிவு செய்தபடி மேலே கொடுக்கப் பட்டுள்ளது.

கோயிலண்ணன் திருமாளிகை குருபரம்பராப்ரபாவம் என்ற நூல் கோயிலண்ணனின் 594ஆம் அவதார ஆண்டு வைபவத்தைக் கொண்டாடும் முகத்தான் 1983ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது. அதில் பாகம் 2, பக்கம் 15இல் குமார கந்தாடை அண்ணன் என்கிற வித்வத் வரதாசார்யார் வைபவம் என்ற தலைப்பிலும் கோயில் மரியாதை மாறாடின விஷயம் என்ற தலைப்பிலும் கொடுக்கப்பட்டு உள்ள செய்திகளை இந்தக்கல்வெட்டு தரும் செய்திகளுடன் இணைத்துக் கொள்ளவேண்டும்.

**குமார கந்தாடை அண்ணனென்கிற வித்வத் வரதாசார்யர் வைபவம்**

அநந்தரம் கந்தாடை அண்ணனென்கிற வரதாசார்யருக்கு இரண்டாவது குமாரர் ஆவணி மாதம் அநுஷ நக்ஷத்ரத்திலே அவதரித் தருளினார். திருத்தகப்பனாரான வரதாசார்யரும் தமது குமாரருக்கு வரதாசார்யர் என்று திருநாமம் சாத்தி ஸகாலங்களிலே உபநயனாதி பஞ்சஸம்ஸ்காராதிகள் தாமே செய்து வேதவேதாந்தம் முதலான ஸாமான்ய சாஸ்த்ரங்களையும் அத்யாத்மிக சாஸ்த்ரங்களான ஸ்ரீபாஷ்ய திவ்யப்பிரபந்த பகவத் விஷய ரஹஸ்யக்ரந்தங்களைக் கற்பித்து வைத்தும், ஸகாலத்திலே க்ருஹஸ்தாச்ரமத்தையும் செய்வித்தருளி தர்சநத்திலே நம்பிள்ளைபோலே மஹாவித்வானாய் ப்ரகாசிக்கும்படி செய்தருளினார். பிற்காலத்திலே இவர் வித்வத் வரதாசார்யர் என்று ப்ரஸித்தராக விளங்கினார்.

**இவர் தமது திருத்தகப்பனாரைப்போலே சிஷ்ய உஜ்ஜீவ னார்த்தம் பாரத தேச பூர்த்தி யாத்ரையாக எழுந்தருளிவிட்டபடியால் இந்த ஸ்வாமி ஸ்ரீரங்க க்ஷேத்ரத்திலே சில காலமே இருந்திருப்பதாகத் தெரிய வருகிறது.** வித்வத் வரதாசார்யர் ஸ்வாமி பெரியபெருமாளை மங்களாசாஸனம் செய்யத் திருவுள்ளத்திலே கொண்டு தமது திருத் தகப்பனாராலே தொடங்கப்பட்ட தேச ஸஞ்சாரம் பூர்த்தியாகாமல் ஆசார்யன் திருவடியை அடைந்துவிட்டபடியினாலே தாம் அதைப் பூர்த்தி செய்யத் திருவுள்ளம் கொண்டிருக்கையிலே பெரிய பெருமாளை ஒருதரம் ஸேவித்து வர உத்யோகித்துச் சில முதலிகளோடே கோயிலுக்கு எழுந்தருளினார்.

அநந்தரம் பெரியபெருமாளை மங்களாசாஸனம் செய்து கொண்டு திருமாளிகைக்கு எழுந்தருளினவளவிலே கோயிலிலே நடந்த விருத்தாந்தங்களை இங்குள்ள முதலிகள் வாயிலாக அறிந்தபடி யெங்ஙனேயென்னில்:-

‘‘ஸ்வாமி உடையவரால் மிகவும் அபிமானிக்கப்பட்டவரான முதலியாண்டானுக்கு ஏற்படுத்தின ஸ்ரீகார்யம், முதல்வரிசை மரியாதைகள் துலுக்காவஹனம் (முஸ்லீம்கலகம்) ஆன பன்றியாழ் வான் மேட்டுக்கலவரத்திலே நம்பெருமாள் வெளிநாடுகாணச் சென்றமையால் ஸ்வாமி உடையவரின் நியமனம் சீர்குலைந்து கோயில் பாழடைந்து கிடக்க, நம்பெருமாள் 61, ஆண்டுகாலம் கழிந்து கோயிலேற எழுந்தருளி பழையவழக்கங்கள் ஓரளவு நடந்து வருகிற வளவிலே ஸ்வாமி உடையவரின் புநரவதாரமான அழகிய மணவாள மாமுனியான பெரியஜீயரும் கோயிலுக்கெழுந்தருளி தர்சந நிர்வாஹகராய் இருந்த அளவிலே முதலியாண்டானின் புனர் அவதாரமான ஸ்வாமி அண்ணனிற்கு இந்த முதலியாண்டானின் ஸ்ரீகார்ய மரியாதை வரிசைகளை ஏற்படுத்தி, 10 தலைமுறை அளவாக அனுபவித்து வந்த பெரியபெருமாள் ஸந்நிதி ஸ்ரீகார்யம் மரியாதை வரிசைகளை இந்த விஜயரங்க சொக்கநாயகன் வாதூல ரெங்கா சார்யரிடம் ஆச்ரயித்து ஆசார்யரான இந்த ரெங்காசார்யருக்கு ஏற்படுத்திப் போட்டான் என்ற விஷயத்தைக் கேட்டு மிகவும் துக்கித்து, நம்பெருமாள் திருவோலக்கத்திற்கு எழுந்தருளாமல் ஏகாந்தத்திலே பெரியபெருமாளை மங்களாசாஸனம் செய்து கொண்டிருந்து அந்த விஜயரங்க சொக்க நாயகரான ப்ரபுவிற்கு இந்த விஷயங்களைக் குறித்து தமது முதலிகளிலே ஒருவரை தமக்குப் பிரதிநிதியாக ஸ்ரீமுகத்தோடே (பெட்டிஷன்) கூட திருசிரபுரமான திருச்சிக்கு அனுப்பியருள அந்தப் பிரபுவான விஜயரங்க நாயகரும் இவ்விஷயத்தை (வழக்கை) விசாரித்து அண்ணன் ஸ்வாமி ஆதீனத்திற்கு அனாதியாய் நடந்து வந்ததென்றும் அறிந்து, அண்ணங்கார் ஆதீனத்திற்கு பாதியும் இப்பொழுது நாம் ஆச்ரயித்த ஆசார்யருக்குப் பாதியுமாக ஆளுக்குப் பேர்பாதியாய்த் தீர்த்த மரியாதைகள் நடத்தி வைக்கிறோம் என்றும், இதை இரு ஆதீன ங்களும் ஏற்றுக் கொள்ளவேணுமென்றும் தாம் பெருமாளை ஸேவிக்க நிம்மதியோடேகூட வந்து போகவேணுமென்றும் எழுதிக் கொடுத்த னுப்பிவித்தான்.

இத்தை வித்வத்வரதாசார்யரும் கண்டு இது தமக்குத் திருப்தி யாக இல்லை என்றும், ஆசார்யரான ஸ்ரீமந்மணவாளமாமுனிகளான பெரிய ஜீயரால் நியமித்துச் செய்யப்பட்டதாய் நம்பெருமாளாலே ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு நியமனத்திற்கு முரணாக இருப்பது கண்டு சடக்கென தமது யாத்ரையை பூர்த்தி செய்வதன் பொருட்டு வடக்கே எழுந்தருளிவிட்டார்’’.

ஸ்ரீரங்கம் கல்வெட்டு எண் 560இல் குறிப்பிடப்பட்டுள்ள வரதாசார்யரைப்பற்றிய செய்திகள் இவ்வாறு கோயிலண்ணன் திருமாளிகை ஒழுகில் காணப்படுகிறது. இந்தக் கல்வெட்டில் குறிப் பிடப்படும் குமார வேங்கட வரதாசார்யரும் மேலே குறிப்பிடப்பட்டு உள்ள வரதாசார்யரும் ஒருவரே ஆவார். ஆகவே பெரிய பெருமாள் திருமுன்பு ஸ்ரீபாஷ்யம் ஸேவிக்கவேண்டியது வாதூல தேசிக வம்சத்த வர்களது கடமையாகும். தற்போது அமுலில் உள்ள அப்பன் ரங்கா சார்யருக்கு 15 நாள் மரியாதையும் கோயில் அண்ணன் குடும்பத்தி னருக்கு 15 நாள் மரியாதையும் பிற்காலத்தில் ஏற்படுத்தப்பட்டது.

தற்போது எந்த மந்திர புஷ்ப நேரத்திலும் நம்பெருமாள் ஸ்ரீபாஷ்ய விண்ணபத்தைக் கேட்பதில்லை. எம்பெருமானார் காலம் தொட்டு வாதூல தேசிக வம்சத்தவர்கள் நம்பெருமாள் திருமுன்பு ஸ்ரீபாஷ்யம் ஸேவித்திடும் உரிமையைப் பெற்றிருந்தார்கள் என்பதை மேற்குறிப்பிடப்பட்ட கல்வெட்டு தெளிவுபடுத்துகிறது. இன் றைக்கும் வாதூல தேசிக வம்சத்தவர்கள் திருவரங்கம் பெரிய கோயிலில் பல கைங்கர்யங்களில் ஈடுபட்டும் அதற்குரிய மரியாதை களைப் பெற்றும் வருகின்றனர். ஸ்ரீபாஷ்யம் என்பது நமது ஸம்ப்ர தாயத்தின் உயிர்நாடியான க்ரந்தமாகும். சர்வ லோகநாதனான ஸ்ரீரங்க நாதன் திருமுன்பு ஸ்ரீபாஷ்யம் ஸேவிக்கும் உரிமையைப் பெற்றிருந் தவர்கள் வாதூல தேசிக வம்சத்தவர்கள். கூரத்தாழ்வானின் ஆயிர மாவது ஆண்டைக் கொண்டாடியபிறகு எம்பெருமானாருடைய ஆயிரமாவது கொண்டாட்டங்களை நோக்கிச் சென்று கொண்டிருக் கிற கால கட்டத்தில் ‘‘அடியார்கள் வாழ அரங்கநகர் வாழ’’, ‘‘ராமா நுஜார்ய திவ்யாஜ்ஞா வர்த்ததாமபிவர்த்ததாம்’’ போன்ற சொற் றொடர்கள் கடலோசை ஆகாமல் ஸ்ரீவைஷ்ணவர்கள் காத்தருள வேண்டும். இந்தக் கட்டுரை ஆதாரங்களின் அடிப்படையில் எழுதப்பட்டுள்ளது. ஸ்ரீபாஷ்யத்தை ஸேவிக்க உரிமை படைத்தோர் தாங்களாகவே மனமுவந்து இப்பேர்ப்பட்ட கைங்கர்யம் நமக்கு வாய்த்துள்ளதே என்ற உவகையுடன் இந்த வாசிகமான கைங்கர் யத்தை செய்திட முன்வர வேண்டும். அதுதான் நாம் பூர்வர்களுக்குச் செலுத்தும் நன்றிக்கடன். இல்லை!இல்லை!! இல்லை!!! இதெல்லாம் வழக்கமில்லை ஏதோ புதிது புதிதாக வெல்லாம் இவர் சொல்லுகிறார். இது இந்தக் கோயிலில் வழக்கமே இல்லை என்று சொல்ல முற்பட்டால் அதை ஏற்றுக் கொள்ள இயலாது. ஸ்தலத்தார்கள் இந்தக் கோயிலில் மரபுகளைக் கட்டிக் காப்பதற்குத்தான் பல மரியாதை

களைப் பெற்று வருகின்றனர். ஸ்கீமின்படி சுழல்முறை அறங்காவலராக ஸ்தலத்தார்களில் ஒருவர் பொறுப்பு வகிப்பதும், மரபுகளைப் பேணிப் பாதுகாப்பதற்குத்தான்.

கோயில் உள்துறை நடைமுறைகளை நமக்கு நாமே சரி செய்து கொள்ளாமல் இந்து சமய அறநிலையத்துறை அதிகாரிகளிடம் சென்றால் அவர்கள் ஆப்பத்தை குரங்கு பங்கிட்டு கொடுத்தது போல மெல்ல மெல்ல ஸ்தலத்தார்களுக்குள்ள உரிமையை இல்லையெனச் செய்துவிடுவார்கள். உள்துறை விவகாரங்களை நமக்குநாமே பேசித் தீர்த்துக்கொள்ளவேண்டும். நம் பூர்வாசார்யர்கள் விட்டுச் சென்ற அஹங்கார மமஹாரங்களெல்லாம் பன்மடங்கு வட்டியைப் பெருக்கிக் கொண்டு நம் அனைவரையும் ஆட்கொண்டுள்ளது. ஸ்ரீவசனபூஷண ஸூத்ரங்களும் நைச்யானுஸந்தான வார்த்தைகளும் ஒரு போலித் தன்மையை அடைந்துள்ளன. ‘‘அடியேன்’’ என்ற சொல்லுக்கு என்ன பொருள் என்றே தெரியவில்லை. இது ஜீ போன்ற ஸ்ரீவைஷ்ணவ மரியாதைச் சொல் போலும். இதுதான் நிதர்சனம். ஆனால் நம்மில் பலர் இதை ஒப்புக் கொள்ளக்கூடிய நிலையில் இல்லை. உண்மையிலேயே ஸ்ரீவைஷ்ணவத்தில் மறுமலர்ச்சி ஏற்படவேண்டும் என்றால் நம்பெருமாள், மீண்டும் ஸ்ரீபாஷ்யம் கேட்க வேண்டும். (முதல் ஸூத்ரத்தை மட்டும் சொல்லிவிட்டு சாற்றுமுறை செய்வது அல்ல. ஸ்ரீபாஷ்யத்தில் உள்ள ஒவ்வொரு வாக்கியங்களையும் வரியடைவே குறிப்பிட்ட கால அவகாசத்திற்கு ஏற்ப மந்திர புஷ்பத்தின்போது ஸேவிக்க வேண்டும்.)

நாட்டில் மருத்துவமனைகள் மூடப்பட்டு, அனைத்து மக்களும் நல்ல உடல் நலத்துடன் விளங்கவேண்டுமானால், புராதனமான தன்வந்தரி ஸந்நிதியிலிருந்து குடிநீர் எனப்படும் கஷாயம் எழுந்தருளப்பண்ணப்பட்டு, பெரியபெருமாளுக்கு ஸமர்ப்பித்திட வேண்டும். இந்தக் கலியுகம் முடியும்வரை இது நடைபெறப் போவதில்லை. ஆகயைால் இதுவொரு பகல் கனவே. தன்வந்தரி ஸந்நிதி வடகலையார் வசம் இருப்பதால் அங்கிருந்து பெரிய பெருமாளுக்கு குடிநீர் கொண்டு வரப்படுவதில்லை. உத்தம நம்பி வம்சத்தவர்களிடம் இருந்த தன்வந்தரி ஸந்நிதி ஏதோ ஒரு கால கட்டத்தில் கைமாறி விட்டது. அதன் விளைவாக நாட்டில் புதுப்புது வியாதிகள் பெருகிவிட்டன. அரைகுறை மருத்துவர்களும் மருத்துவத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். இந்த அவலத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும்நாள் எந்நாளோ?

✸✸✸